2. 2. 2025 Page - 3 - தினமலர் - கோவை செய்தி




■கோவை அவினாசிலிங்கம் மனையியல் பல்கலை நாட்டு நலப்பணி திட்ட மாணவிகள் சார்பில், போதை ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி நடந்தது.

## போதை ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி

**கோவை, பிப். 2–**

கோவை அவினாசி லிங்கம் மனையியல் உயர் கல்வி நிறுவனம், உயிர் வேதியியல் உயிர் தொழில் நுட்பவியல் மற்றும் உயிர் தகவலியல்துறை மாணவிகள் சார்பில், நாட்டு நலப் பணித்திட்டம் சிறப்பு முகாம், மாதம்பட்டியில் நடந்தது.

இதன் ஒரு பகுதியாக, போதை ஒழிப்பு விழிப் புணர்வு பேரணி நேற்று நடந்தது. பேரணியை, அரசு தேர்வுகள் துறை உதவி இயக்குனர் சதீஸ் குமார், கொடி அசைத்து துவக்கி வைத்தார்.

இதில் திட்ட அலுவலர் ஷோபனா, துணை திட்ட அலுவலர் வசுந்தரா, முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு நாட்டு நலப் பணித்திட்ட மாணவிகள் பங்கேற்றனர்.

எழுத்தறிவு இல்லாதவர் களுக்கான கணக்கெடுப்பு மற்றும் மரம் நடுதல் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.